

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தேவனூர் தமது சொந்த கிராமத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலை யொட்டி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் தமது குடும்பத்தினருடன் தேவனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் வாக்களித்தார். உடன் சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், எஸ்.எஸ். காயத்திரிதேவி சிவசங்கர், எஸ்.எஸ். சிவகுமார், எஸ்.எஸ்.விசாலாட்சி சிவகுமார் ஆகியோர் ஜனநாயக கடமை ஆற்றினார்கள்.



சேலம் வடக்கு சட்டமன்ற கழக வேட்பாளர். மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் தனது குடும்பத்தினருடன். சி எஸ்.ஐ பாலிடெக்னிக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்கு சாவடியில் வாக்களித்தார்.



திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் இ.பெ. செந்தில்குமார் தனது மனைவி மெர்சி செந்தில்குமாருடன் தனது வாக்கை பதிவு செய்தார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் கழக வெற்றி வேட்பாளர் வசந்தம் க.கார்த்திகேயன் அவரது மனைவியுடன் தனது சொந்த ஊரான தியாகதுருகம் அருகே உள்ள சாத்தனூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் வாக்கு செலுத்தி ஜனநாயக கடமையை ஆற்றினார்.



மதுரை வடக்கு தொகுதி கழக வேட்பாளர் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள அரசு பள்ளியில் குடும்பத்தினருடன் சென்று தனது வாக்கினை பதிவு செய்தார்.



காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் கதிர்ஆனந்த் எம்.பி. குடும்பத்தினருடன் காட்பாடி காந்தி நகரில் உள்ள டான்பாஸ்கோ பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார்.



சிவகங்கை மாவட்டம் கண்டனூர் சிட்டாள் ஆச்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கார்த்தி, சிதம்பரம் எம்.பி. மற்றும் திருமதி ஸ்ரீநிதி அவரது புதல்வி ஆகியோருடன் வாக்கினை பதிவு செய்தார்.

### சென்னையில் பாதுகாப்பு ஏற்பாடுகள்:

# மக்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாக்களித்தனர்!

## காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக் தகவல்!

சென்னை, ஏப். 24-

சென்னையில் வாக்கு பதிவு மையத்தில் மக்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாக்களித்தனர் என்று, காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக் தெரிவித்துள்ளார். தமிழக சட்டமன்ற தேர்தல் இன்று காலை 7 மணி முதல் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. சென்னை பெருநகர காவல் எல்லையில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் பொதுமக்கள் தடையின்றி வாக்களிக்கும் வகையில் தேர்தல் ஆணையத்துடன் இணைந்து சென்னை பெருநகர காவல்துறை செய்துள்ளனர். குறிப்பாக சென்னையில் பதற்றமாக வாக்கு சாவடிகளை அடையாளம் கண்டு துணை ராணுவ வீரர்கள் உதவியுடன் போலீசார் பாதுகாப்பு பணி மேற்கொண்டு வருகின்றனர்.

வாக்காளர்கள் எளிமையாக வாக்கு அளிக்கும் வகையில் காவல்துறை பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்துள்ளது. ராணி மேரி கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சென்னை போலீஸ் கமிஷனர் அபின் தினேஷ் மோதக் நேரில் பார்வையிட்டார். அப்போது வாக்கு எண்ணிக்கை மையத்தை சுற்றி செய்யப்பட்டுள்ள சிசிடிவி உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அங்கு பணியில் இருந்து காவல் துறை அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார்.

பிறகு பாதுகாப்பு பணியில் உள்ள போலீசாருக்கு உணவு மற்றும் உள்ளிட்ட பொருட்கள் தடையின்றி கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்தார்.

### முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரை! ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரை!

# ‘தமிழியல் கலைக் களஞ்சியம்’ வெளியீட்டு விழா!

## முனைவர் ம.திருமலை நூலை வெளியிட – சு.வெங்கடேசன் எம்.பி. பெறுகிறார்!

மதுரை, ஏப்.24-

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் ‘தமிழியல் கலைக் களஞ்சியம்’ வெளியீட்டு விழா நாளை (25.4.2026) மாலை 5.00 மணியளவில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரையில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழுத் தலைவர் ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரையாற்றுகிறார்.

தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.திருமலை நூலை வெளியிடுகிறார்.

சு.வெங்கடேசன் எம்.பி. நூலை பெற்றுக் கொள்கிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக பொருளாளர் பேராசிரியர் சா.சரவணன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழு, ஆட்சிக் குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா புலவர் வேங்கைமார்பன்

ஏப்ரல் 24 (1985)



அன்றைய தென்னார்க்காடு மாவட்டத்தின் கழகப் பிரச்சாரக்குழு தலைவராகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியார், அறிஞர்அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறுப் போராட்டங்களில் பங்கேற்றதுடன், 1965இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, வேலூரில் ஓராண்டு சிறைவாசமும் – நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சென்னையில் ஓராண்டு சிறைவாசமும் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



விராலிமலை சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கே.கே.செல்லப்பாண்டியன் கீரனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தனது வாக்கை பதிவு செய்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஐ. வெங்கட்ராமன்

ஏப்ரல் 24 (2020)



தி.மு.கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.

திருவொற்றியூர் நகர அமைப்பு துவங்கப்பட்டபோதே, அதன் முதல் செயலாளராகவும் – ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டக் கழக அவைத்தலைவர், துணைச் செயலாளர், பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.

திருவொற்றியூர் எண்ணூர் தொழிற்சங்கப் பேரவையை முதன்முதலாக துவக்கியதோடு, நகர்மன்ற துணைத் தலைவராகவும் – காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி, சைதாப்பேட்டை நிலவள வங்கி, அறிஞர் அண்ணா பட்டுக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் இயக்குநராகவும் இருந்தவர்.

“திசை மாறாத பறவை” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.